https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

Published on 14, December -2024 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# நான் இல்லாத என் வீடு கவிதைத் தொகுப்பும் நந்திதாவும்

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

**முனைவர் ப. குணசுந்தரி**
உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை
தொலைமுறை மற்றும் இணையவழிக்கல்வி மையம்
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 046

**அறிமுகம்**

கனவுகளுடனோ அல்லது கட்டாயத்தினாலோ தனக்குள் வந்தவர்களைச் சிறந்த மாணவர்களாக மட்டுமன்றி படைப்பாளிகளாகவும் உருவாக்கிய மிகப்பெரிய களம் சென்னைக் கிறித்தவக் கல்லூரியின் வகுப்பறையும் வனமும். ஆண் - பெண், இளைஞர் - மூத்தோர், ஆசிரியர் - மாணவர் பாகுபாடின்றி செஞ்சந்தன மரங்களின் அடியில் கூடி பல்வேறு துறை சார்ந்தவர்கள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் கவிதைகள் வாசிக்க, கருத்துக்கள் பகிர வளர்த்தெடுக்கப்பட்ட படைப்பாளர்களுள் நந்திதாவும் ஒருவர்.

> **எனக்கான கருப்பையுள்**
>
> **நானாக வாழ்ந்ததைக்**
>
> **கெடுத்தது வெளிச்சம்** (பக்24. நான் இல்லாத என் வீடு)

என்ற கவிதையின் மூலம் 1994இல் அறிமுகமான வனக்கவிஞர். அவருடைய இயற்பெயர் இரா. ஜானகி என்பது. அன்று தொட்டு எழுதிய சிறிதும் பெரிதுமான கவிதைகளை எல்லாம் தொகுத்து 44 கவிதைகளைக் கொண்ட தொகுப்பினை 2009இல் **நந்திதா** என்ற புனைபெயரில் **நான் இல்லாத என் வீடு** எனும் தலைப்பில் நூலாக வெளியிட்டுள்ளார்.

மணப்பாறையில் இயங்கிவரும் செந்தமிழ் அறக்கட்டளை எனும் அமைப்பு படைப்பிலக்கிய விருதுக்காக இந்நூலைத் தேர்ந்தெடுத்து 18.09.2010இல் இரண்டாம் பரிசு வழங்கியது என்பது குறிப்பிடத்தக்கது. ஆயினும் இவர் நூல் குறித்து எவ்விதமான விமரிசனங்களும் இதுவரை எழுதப்படாத சூழலில் இத்;தொகுப்பில் இவர் பதிவு செய்திருக்கும் கருத்துக்களின் ஊடாக வெளிப்படும் இவர் ஆளுமையை எடுத்துக்காட்ட இக்கட்டுரை முயற்சி செய்துள்ளது.

**குடும்பப் பின்னணி**

கன்னடம் இவரது தாய்மொழி. வீரசைவக் குடும்பத்தில் பிறந்தவர். ஆண்களை மிக உயர்வாகக் கருதும் சமூகம். அதிலும் அச்சமூகத்தில் படித்து இளம் வயதிலேயே அரசு வேலையும் கிடைத்ததனால் பொருளாதார நிலையிலும் கை உயர்ந்திருக்கும்

தலைவராக அப்பா. இன்றுவரை அவர் சொல்லுக்கு மறுப்பேதும் சொல்லாது பணிசெய்யும் அம்மா. பெண்களுக்குக் கல்விக்குரிய அடையாளமே இல்லாத சமூகம் நந்திதாவுடையது என்பதைக் கவனத்தில் இறுத்துவது அவசியம்.

தந்தை மின்சாரத்தறையில் நல்லபணியில் இருப்பதனால் பொண்ணுங்கள படிக்கவே வைக்கல என்று யாரும் அவர் புழங்கும் வட்டத்தில் சொல்லிவிடக் கூடாது என்பதற்காக எவ்வளவு திறமையானவர் களாக இருந்தாலும் எழுதப் படிக்கிற அளவுக்கு நாலு எழுத்து தெரிஞ்சா போதும் என்ற மனநிலையில் பள்ளிக் கல்வி வரை அனுமதித்தவர். அதுவே பெரிய விஷயம் அவர்கள் சமூகத்தில்.

பள்ளிக்கல்வியின் போதே அப்பா தனக்கு ஏற்பாடு செய்த திருமணத்தை மறுத்து உயர்கல்வி படிக்கவேண்டும் என்று தன் நிலைப்பாட்டில் உறுதியாக இருந்துள்ளார். அச்சூழலில் அவருக்குக் கிடைத்த மன நெருக்கடியிலிருந்து மீள எழுத்து அவருக்கு ஆறுதலாக இருந்துள்ளது.

### நந்திதாவும் எழுத்தும்

எல்லோரும் அவரவர் வேலைகளில் மூழ்கியிருக்க தான் மட்டும் வீட்டில் தனித்து, பேசுவதற்கும் தன் கருத்தைக் கேட்பதற்கும் யாருமற்ற நிலையில் வீட்டின் வேலைகளைச் செய்தபடி அவ்வுணர்வுகளிலிருந்து மீள தனக்கு ஒருவகையில் கைகொடுத்தது எழுத்து என்பதையும் தான் அன்று எழுதிய அனைத்தும் இருந்திருந்தால் தன் படைப்புகள் இதுவரை யாரும் சொல்லப் புகாத உணர்வுகளைச் சொல்வனவாக இருந்திருக்கும் என்பதையும் சொல்லக் கேட்டிருக்கிறேன். கவிதைத் தொகுப்பில் தன் எழுத்து பற்றிக் குறிப்பிடும்போது

இப்படித்தான் நான் எழுதப்

பழகியிருக்கனும்

கோபமும் இயலாமையும்

எப்போதெல்லாம் எனக்கு

நெருக்கமானதோ

அப்போதெல்லாம் அவைகளை

வேகவேகமாய்

எழுதி… படித்து… கிழித்துப்

போட்டிருக்கிறேன். (பக்20. நான் இல்லாத என் வீடு)

என்று பதிவுசெய்கின்றார். நெருக்கடி பலவற்றைக் கடந்து உயர்கல்விப்பயில அனுமதி கிடைத்த பிறகு வனத்தின் அறிமுகம் அவரின் உணர்வுகளை, மன நெருக்கடிகளைக் கடக்க முயற்சிக்கும் அவர் நிலைப்பாட்டையும் தன் சமூகத்தில் வீடு இப்படித்தான் இருக்கிறது என்பதையும் பதிவுசெய்ய உதவியாக இருக்கிறது. உணர்வுகளை அவ்வப்போது எழுதிப் படித்துக் கிழித்துப் போடப் பட்டவைகளுக்குப்பிறகு எழுதிச்சேர்த்த கவிதைகளின் தொகுப்பு தான் நான் இல்லாத என் வீடு.

### நான் இல்லாத என் வீடு – துஷ்ட தேவதைகள்

உயர்கல்விப் பயில அனுமதிக்கப்பட்ட போதும் திருமணப் பேச்சு ஒரேயடியாக நின்றுவிட்டது என்று சொல்வதற்கில்லை. என்றாலும் படிக்கவேண்டும் என்ற தன் நிலைப்பாட்டில் நந்திதா உறுதியாக இருந்தபோது நீ பொண்ணு. உனக்கு இவ்வளவுதான் அனுமதி. இவ்வளவுதான் படிப்பு. இப்படித்தான் இருக்கணும். இதைத்தாண்டி நீ சிந்திக்கவே கூடாது. வேறவழியே இல்ல. ஏத்துக்கிட்டுத்தான் ஆகணும். இயங்க ஆசைப்படவே கூடாது என்று அப்பா, அம்மா, அண்ணன், பெரியவர்கள் என்றில்லாது அவர்கள் சமூகத்தில் வீட்டிற்கு வருவோர் போவோரெல்லாம் பேசிய பேச்சுக்கள், விழுந்த அடிகள், ஏற்பட்ட அவமானங்

கள் மனதில் அழுத்தமாய் இருக்க அதனை யாரோ? என்கிற கவிதையில்

வருவதாய்ச் சொன்ன மழைக்காக

ஏரி வெறுமனே காத்திருப்பதுபோல

என்ன தவிர்த்தும்

வேண்டுமெனச் சிலர்

பின்தொடர்ந்து வரக்கூடும்

தற்செயலான அல்லது திட்டமிடப்பட்ட

சண்டைகள்

சலிப்பூட்டும் குறிப்புகள்

ஏதும் பாக்கியிருப்பதாகத் தெரியவில்லை.

கேட்டால் அதிகம் பேசிப்பழகாத

தூரத்து சொந்தமென்றும் கூறலாம்.

……

யாரோ?

எனக்கும் அவளுக்கும்

தொடர்பில்லையென

லேசில் சொல்லிவிட முடியாது.

பழகிய உருவங்களில் மட்டுமே

வந்து போகின்றன

துஷ்ட தேவதைகள் (பக்30. நான் இல்லாத என் வீடு)

என்று கோடிட்டுக் காட்டியிருப்பார் நந்திதா. பெற்றோரின் துணை தவிர்த்து தன்னிச்சையாய் வளரும் பிள்ளைகள் வீட்டை இழக்கிறார்கள். வீடு என்பது அவர்களுடைய பாதுகாப்பு. என்ற கருத்து சிறுவயது முதற்கொண்டே குழந்தைகளுக்குக் கற்பிக்கப்படுவதை பயமுறுத்தப்படுகிறார்கள் பிள்ளைகள் எனும் கவிதையில் பின்வருமாறு

ஓடாதே

விழுந்துவிடுவாய்

சொல்வதைக்கேள்.

அதிகம் பேசாதே.

மீறினால்

சாமி கண்ணைக் குத்திவிடும்

யாரையும் நம்பாதே

தனியா போகாதே

வீட்டை இழப்பாய்

பிச்சையெடுக்க நேரிடும் (பக்25. நான் இல்லாத என் வீடு)

என்று குறிப்பிடுவதைக் காணலாம். மேலும் பெரியோர்களின் இதுமாதிரியான பயமுறுத்தல்கள் ஒவ்வொரு காலத்திலும் தொடர்வதையும் அது மாறாது பாதுகாக்கப்படுவதையும்

வேலையில்லாதவனின்
பகல்பொழுதுபோல

நீள்பவை

அவர்களுக்கெதிரான பயங்கள்

அது யாராலும் தொலைந்து போகாதபடி

மிகுந்த பாதுகாப்போடு

பராமரிக்கப்படுகின்றது (பக்25. நான் இல்லாத என் வீடு)

என்றும் இடத்திற்கு ஏற்றபடி பயம் பலவாறாய் தொடர்வதையும் பதிவுச் செய்வதைக் காணமுடிகின்றது. அதனால் தான் வீட்டைச்சுற்றியும் உறவுகளைத் தொடர்ந்தும் நந்திதாவின் கவிதைகள் வலம்வருகின்றன.

நூலின் தொடக்கத்தில் பச்சியப்பன் அவர்கள் நந்திதாவின் கவிதை குறித்து எழுதிய கருத்துகளுள் மிக முக்கியமானது **வீடு தன் திண்ணையில் அமர்த்தி இக்கவிதைகளைத் தருகிறது. வீடென்பது மனம், உடல், நம்மிடம் சொல்லப்படும் ஒரு அனுபவம். வீட்டை எப்படி துறப்பது. எல்லாக் கவிதைகளும் வீட்டைச்சுற்றிப் படர்ந்த கொடியென காற்றில் தலையாட்டுகின்றன** என்று எழுதியிருப்பார். (பக்18. நான் இல்லாத என் வீடு)

**புதிது புதிதாய்ப் பெயர்கள்**

நீளும் என் பெயரென என்ற கவிதையில் அப்பா எதிர்பார்த்தபடி தான் நடந்துகொள்ளாததனால் பாசத்தில் அவரிடமிருந்து இதுவரை கிடைத்த சலுகைகளெல்லாம் காணாமல் போய்

**தலைவாங்கி**

**ஒதியமரம்**

**பூமிக்கு பாரம்**

.....

**ஒடுக்கி** (பக்27. நான் இல்லாத என் வீடு)

எனப் புதிது புதிதாக அவராலேயே தனக்குப் பெயர் சூட்டப்படுவதையும் தனக்குப் பிடித்தமானதாக அதுவரை வீட்டிலிருந்த பொருட்கள், பூனை உட்பட நிபந்தனைகளுக்குப் பயந்து தனக்கு ஆகாமல் போனதையும் குறிப்பிடுகின்றார். மேலும் அப்பா பொண்ணு என்று அழைத்தபேதெல்லாம் கிடைத்த சலுகைகள் மொத்தமும் இருந்ததற்கான அடையாளம் கூடிப்போனதில் என் மீதான அக்கறை கைம்மீறிப்போனதா? என்றும் கேட்கின்றார். இந்தக்கேள்வி அம்மாவிற்கும் அவளுடன் சேராமலேயே இருக்கும் தங்கைக்குமாகவே பார்க்கப் படுகிறது.

**அப்பாவைப் போலவே அண்ணனும்**

அழகு என்ற கவிதையில் அண்ணன் அப்பாவைப்போல நடந்துகொள்வதைப் பின்வருமாறு பதிவு செய்கிறார்.

**சடங்கை ஏற்க மறுப்பவள்**

**படித்த முட்டாள்**

**உள்ளங்கையில்**

**உன்னால் விரும்பி**

**மறைத்து ரசிக்கப்படும் தனிமைகளோடு**

**மக்கிக்கிடக்க**

**தவ்ளுண்டு வெற்றிடம் கூட ....**

**எங்கள் அனுமதியின்றி கிடைக்காது**

**அப்பாவிற்குத் தப்பாமல் பிள்ளையும்**

(பக்55. நான் இல்லாத என் வீடு)

என்று எழுதும் நந்திதா அதைத்தொடர்ந்து தப்பிப் பிழைக்க வழியுண்டு, பிடிவாதம் கூடாது, முன் வருவோரிடம் பகிரங்கமாக, எதையும,; சுட்டிக்காட்டாது இருப்பதே, உன் வயதிற்கு அழகு என்று குறிப்பிடுவதையும் எழுதுகிறார்.

**அம்மாவின் இயலாமை**

அம்மாவும் தன்னைப் புரிந்து கொள்ளாமல் தனக்குப் பிடிக்காததைச் செய்யக் கட்டாயப்படுத்துவதையும் சொல் கேட்காததனால் என்ன ஆகுமோ என்ற தவிப்பில் இயலாமையில் அவள் அழுது கொண்டே இருப்பதையும் பதிவு செய்கிறார். மேலும் தன் கவிதையில் நந்திதா அவர்கள் அப்பாவிற்கும் அம்மாவிற்கும் இடையிலான முரண் என்று எதையும் நேரடியாகக் காட்டவில்லை. ஆனால் தன் இயலாமையை அம்மா அழுகையின்போது வார்த்தைகளில் கொட்டித் தீர்ப்பதை இன்னொரு மாலை எனும் கவிதையில் இப்படி பதிவுசெய்துள்ளார்.

**ஒற்றைத்தலைவலியின் தொந்தரவால்**

**எதிலும் அவளுக்கு மானாவாரியாய்க்**

**கோபம் வந்துவிடுவதுண்டு**

**கையில் கிடைத்ததை**

**எடுத்து அடிக்க**

**பாவாடையில் துடைச்சுப் போட்டேன்**

**முடிந்தவரை சொல்லிப்பார்த்தாள்**

**கண்டுக்காம போனேன்**

**தோணும்போதெல்லாம்** (பக்55. நான் இல்லாத என் வீடு)

பாம்பு கடித்து இறந்துபோன தம்பியையும் அக்கா வாழ்க்கை பாழாகக் கூடாது

என்பதற்காகத் தன்னையே தண்ணீரில் கரைத்துக்கொண்ட அலமேலு சித்தியையும் தன்னைச் சமாதானம் செய்ய ஆயா உணவுத்தட்டுடன் அருகில் வந்தமரும் காட்சியையும் சொல்லிச் சொல்லி அழும் என்று தன் கவிதையைத் தொடரும் நந்திதா அவர்கள்

**திரும்பவும்**

**தனது பிரியத்தைக்**

**கூடுமானமட்டும் காட்டிக்கொள்ள**

**தெரியாமலே போய்விட்டது அவளுக்கு** (பக்36. நான் இல்லாத என் வீடு)

என்று எழுதுகிறார்.

**தயங்காமல் நீந்தப் பழகனும்**

இம்மாதிரியான இக்கட்டான சூழலில் அதை ஏற்றுக்கொள்ளவும் முடியாமல் எதிர்வினை செய்யவும் முடியாத நிலையில் எப்படியாவது தன்னைப் புரியவைக்க முயன்றுள்ளதை எங்கே ஒளித்துவைப்பேன் என்ற கவிதையில்

**இப்பவும்கூட**

**சாமிப் படத்திற்குமுன் உட்கார்ந்து**

**அழுது கொண்டிருக்கிறாள் அம்மா**

**புளியை நசுக்கி கொட்டை எடுப்பதிலும்**

**ஜவ்வரிசி வற்றல் போடுவதிலுமே**

**செலவழிந்து விடுகிறது**

**எனது விடுமுறை நாட்களும்**

**பார்க்கப்பழகிய**

**எவ்வளவு கண்கள்**

**மண்ணில் புதைக்கப்படுகிறது** (பக்74. நான் இல்லாத என் வீடு)

வீட்டில்தான் இருக்கிறேன் அவர்களின் கண்முன்னால் ஏன் என்னை யாரும் தேடவில்லை என்றும் எட்டு ஊருக்குக் கேட்கும்படியாகவும் கோபத்துடன் அடிவயிற்றைப் பிடித்துக் கொண்டு சத்தம்போட்டும் பார்த்துவிட்டேன் எல்லாம் கிணத்தில் போட்ட கல்லாய் இருந்துவிட்டது. ஆனாலும் அவை

**கரைந்து போகாதபடி**

**என்னுடையவைகளை**

**எங்கே ஒளித்து வைப்பேன்?**

**எதற்கும்**

**தயங்காமல் நீந்தப்பழகணும்**

**முடியாது போனால் திரும்பத் திரும்ப**

**அம்மியில் துவையல் அரைக்க**

**வேண்டியிருக்கும்** (பக்74. நான் இல்லாத என் வீடு)

என்று எழுதுகிறார். இப்படி பல கவிதைகளில் தனது இறுக்கத்தையும் அம்மாவின் தவிப்பையும் பதிவு செய்திருக்கிறார். மன நெருக்கடியில் அவற்றை எதிர்கொள்ள இயலாது தற்கொலை செய்துகொண்ட பலரை நினைவுபடுத்தும் நந்திதா நான் ஏன் சாக வேண்டும். தற்கொலை கூடாது என்று தன்னளவில் இறுக்கமாக இருக்கும் நந்திதா தனக்கான மனவிடுதலையாகவும் தன் சமூகத்தில் பெண்களுக்கு எதிராக இருப்பனவற்றையும் அடையாளப் படுத்துவதற்காகவும் எழுதுகிறார்.

**மூத்த தலைமுறையினர்**

இவர்களின் சமூகத்துக் குடும்பங்களில் பெண்கள் சுயமுடிவுகள் எடுப்பதற்கு அனுமதி இல்லை. பெண்களின் விருப்பம் கணவனுடன் பிணிக்கப்பட்டுள்ளது. கண்ணாடிக் கிழவி என்கிற கவிதையில் தன் ஆயாவின் மனநிலையை இப்படி காட்டுகிறார்.

**எம்மாதிரி ஜென்மம் எடுத்தவ**

**எவளுமில்லங்கும்**

**என்று தொடங்கி கவிதையின் தொடர்ச்சியில்**

**எங்கம்மா வேண்டான்னு**

**எவ்வளவு சொல்லியும்**

ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

பாழாய்ப்போன எங்கப்பன்

அந்த மோசக்காரப் பாவிக்கு

என்னைய கட்டிக் கொடுத்திட்டான்

பெருக்கிவாரி

சாணி அள்ளிக் கொட்டையில

அடிக்கடி

புலம்பக் கேட்டிருக்கிறேன். (பக்68. நான் இல்லாத என் வீடு)

மூத்த தலைமுறையினப் பெண்களிடத்தும் இத்துக்கம் பரவிக்கிடப்பதை நந்திதா பதிவு செய்கிறார். எதிர்க்கத் துணிவில்லாத தன் சமூகத்தில் பெண்கள் ஒரு பக்கம் விருப்பம் இல்லாவிடினும் கட்டியவருடன் வாழ்ந்தாக வேண்டும் என்ற நிலையைப் பதிவுசெய்கிறார்.

அதே நேரத்தில் மொட்டத்தாத்தா என்ற கவிதையில் நோய்வாய்ப்பட்டு சாகும் தருவாயில் உள்ள தாத்தாவைப் பற்றி அம்மாவும் அப்பாவும் என்ன நினைக்கிறார்கள் பேசுகிறார்கள் என்பதை ஒவ்வொன்றாகச் சொல்லி வரும் நந்திதா இறுதியில் தாத்தாவின் மனநிலையைத் தன் மனநிலையுடன் இணைத்து இப்படி எழுதுகிறார்.

ஊரெல்லாம் பேச

அநாதரவாய்

தனியேவிட்டு

ஓடிப்போன கிழவியை நினைத்து

மொட்டத் தாத்தா

ஏங்கியோ திட்டியோ

நான் பார்த்ததே இல்லை

அலட்சியம்

பயமாய் இருக்கிறது எனக்கும் (பக்73. நான் இல்லாத என் வீடு)

இக்கவிதையில் விவரமறியாத தன் சிறுவயதில் தன் சமூகத்தில் நடந்த நிகழ்வை மொட்டத்தாத்தா கவிதையில் பதிவு செய்யும் நந்திதா ஒரேயடியாயும் பெண் பணிந்துவிடவில்லை. தனக்கான வாழ்க்கையைத் தேர்ந்தெடுத்திருக்கின்றாள். அவளோடு தொடர்புடைய ஆண் மற்ற ஆண்களைப்போல இல்லாது சமூகம் அனுமதித்த நிலையிலும் அப்பெண்ணின் உணர்வுக்கு மதிப்பளித்ததோடு தான் தனித்தே வாழ்ந்து முடித்த மொட்டத் தாத்தாவின் மனநிலை வித்தியாசமாய் இருப்பதையும் காட்டுகிறார்.

கட்டாயப்படுத்தி வாழும் வாழ்க்கை யாருக்கும் மகிழ்ச்சியை ஏற்படுத்தாத நிலையிலும் அவ்வழக்கம் காலங்காலமாகத் தொடர்வதையும் காட்டுகிறார். ஒற்றை நிலையில் எல்லோரும் மோசம் என்று பதிவிடாமல் தன் சமூகத்தில் இப்படியும் ஒரு ஆண் இருக்கிறார். பெண் இருக்கிறார் என்று எழுதுவது தான் நந்திதாவின் சிறப்பு.

**நந்திதாவின் கவிதையும் விமரிசனமும்**

எழுதிய கவிதைகளை ஆர்வத்துடன் எடுத்துச் சென்று வனத்தில் வாசிக்கும் போது எனக்கு என்னவோ ஆண் கவிஞர்களின் படைப்புக்களைக் காட்டிலும் பெண்எழுத்துக்களைக் கவனத்துடன் விமரிசனம் செய்யப் படுவது தான் வனத்தின் சிறப்பு.

2009இல் இந்நூல் வெளிவந்தபோது அந்நூலுள் இளம்பிறையும் பச்சியப்பனும் குறித்துள்ள கருத்துகள் முக்கியத்துவம் வாய்ந்தவை.

எங்கே ஒளித்து வைப்பேன் எனும் கவிதையில் கவிஞர் நந்திதா பயன் படுத்திய எதற்கும் தயங்காமல் நீந்தப் பழகணும் என்னும் வரிகளைத் தலைப்பாகக் கொண்டு கவிஞர் இளம்பிறை இவர் நூல் குறித்து எழுதிய கருத்துகளுள் சில

**நந்திதாவின் கவிதைகளில் ஓயாத**

ஞாபகங்களின் தெறிப்புகள் அறுத்து விடப்பட்ட மணிமாலையின் சிதறல் களாகச் சிதறிக்கிடக்கின்றன. வேண்டா மென்று கவனத்துடன் மறந்து சென்றாலும் துரத்திப்பிடிக்கும் குடை, மழையில் நனைவதைப் போன்ற குளுமையான பாசத்தைச் சொல்கின்றன.

காணாமல் போய் விடுவது

அவ்வளவு சுலபமல்ல

என்கிற இவரின் கவிதை வரிகள் உலகில் எதுவும் சுலபமில்லை. காணாமல் போவதிலிருந்து சும்மா இருப்பது உட்பட என்ற எதார்த்தத்தைப் பேசுகின்றன.. போராடி வாழும் பெண்கள் தங்கள் மனதில் எழுதிக்கொள்ள வேண்டிய பொன்னான கவிதை வரிகள் என்று எழுதியிருப்பார். (பக்12. நான் இல்லாத என் வீடு)

ஒருமுறை பேசிக்கொண்டிருக்கும்போது சுயச்சார்புடைய கவிதைகள் என விவாதிப்பதற்கும் இடமில்லாது ஒற்றை வரியில் இவர் படைப்பைக் கடந்து செல்பவர்களை நோக்கி அவர் எழுப்பிய ஆதங்க வார்த்தைகளைக் கவிஞர் சி. முத்துக்கந்தன் அவர்கள் விடுவி என்ற தன் கவிதையில் இப்படி பதிவு செய்திருப்பார்

பார்ப்பன பட்டியலினப்

பெண்களின் படைப்புகள்!

அதிகம் பேசப்படுகிறது...

இதற்கிடைப்பட்ட

எம்போன்ற பெண் எழுத்துக்களை

விரல்கள் கூட

எழுத மறுக்கிறதே ஏன்?

(சுடுங்கோலும் சுவரொட்டியும், விடுவி. வெளியிடப்படாத கவிதை.

மதிப்புரை

தான் இருக்கும் வீட்டில் நடந்த நிகழ்வுகளின் அசைவைப் பகிர்ந்து கொள்ளும் நந்திதா.

பதிலுக்கு

ஒன்றும் செய்ய முடியாதபோது

வேறுவழியின்றி

என் தொடர்பான எதுவும்

அது அது போட்டபடி

போட்ட இடத்தில் சௌகரியமாய்...

என்று நான் இல்லாத நிலையில் அவ்வீடு எப்படி இருக்கும் என்பதையும் பதிவுச் செய்கிறார்.

இனி

என் வீட்டில்

நான் இல்லாததால்

எதுவும் எங்கும்

இடம் மாறிப்போவதற்கான

வாய்ப்பில்லை. (பக்63. நான் இல்லாத என் வீடு)

நந்திதாவின் எழுத்து காத்திரமான சுயச் சார்புடையது என்பதால்தான் அவர் தன் கவிதையில் காட்டமுயலும் அவர் சமூகத்து வீட்டுச் சூழலை உறவுகளின் சிந்தனையை அனைத்தையும் எடுத்துரைக் காவிடினும் இக்கட்டுரை சிலவற்றை எடுத்துக்காட்ட முயன்றுள்ளது.

துணைநூற்பட்டியல்

1. நான் இல்லாத என் வீடு, நந்திதா, ஜூலை 2009, மித்ரா ஆர்ட்ஸ், கிரியேஸன்ஸ்.
2. சுடுங்கோலும் சுவரொட்டியும், - முனைவர் சி. முத்துக்கந்தன், விடுவி. வெளியிடப்படாத கவிதை.